# பத்திரிக்கை செய்தி

## அரசின் வீடு கட்டும் திட்டத்திற்கு பயனாளியிடம் லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய நகராட்சி கட்டட ஆய்வாளருக்கு 7 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திரு.இளங்கோவன், திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் திருவாரூர் நகராட்சி மூலம் அரசின் வீடு கட்டும் திட்டத்தில் அரசின் பயனாளராக தேர்வு செய்யப்பட்ட நிலையில் கடந்த 2014-ம் ஆண்டு வீடு ஒன்றினை கட்டினார். இதற்கான மூன்றாவது தவணையை விடுவிப்பதற்காக திரு.நாகராஜன், நகராட்சி கட்டட ஆய்வாளர், திருவாரூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாகப்பட்டிணம் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2014ம் வருடம் மேற்கொள்ளப்பட்டு திரு.நாகராஜன், நகராட்சி கட்டட ஆய்வாளர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.10,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது திருவாரூர் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 15.04.2025 அன்று திரு.நாகராஜன், முன்னாள் நகராட்சி கட்டட ஆய்வாளருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.11,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.